செ.வெ.எண்: 373 நாள்:09.06.2018

**திருநெல்வேலியில் TNPSC மூலம் உரிமையியல் நீதிபதி போட்டித்தேர்வு நடைபெறும் மையத்தினை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை மாண்புமிகு நீதியரசர் திரு.ஏ.எம்.பஷீர் அகமது அவர்கள், சென்னை உயர்நீதிமன்ற கிளை மாண்புமிகு நீதியரசர் திரு.எஸ்.எஸ்.சுந்தர் அவர்கள், சென்னை உயர்நீதிமன்ற மாண்புமிகு நீதிமன்ற பதிவாளர் திரு.வி.தங்கமாரியப்பன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.**

------

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் இன்று (09.06.2018) உரிமையியல் நீதிபதி (Civil Judge) போட்டித் தேர்வு திருநெல்வேலி மையத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களை சேர்ந்த 986 நபர்கள் எழுத விண்ணப்பித்தனர். இதில் மேரி ஜார்ஜெண்ட் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 300 நபர்கள் எழுத விண்ணப்பித்த நிலையில் 279 நபர்களும், செயிண்ட் ஜான்ஸ் கல்லூரியில் 300 நபர்கள் எழுத விண்ணப்பித்த நிலையில் 292 நபர்களும், மேக்தலின் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 300 நபர்கள் எழுத விண்ணப்பித்த நிலையில் 285 நபர்களும், ஆதித்யா வித்யா நிகேதன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 86 நபர்கள் எழுத விண்ணப்பித்த நிலையில் 81 நபர்களும் என மொத்தம் 937 தேர்வர்கள் தேர்வு எழுதினர் 49 நபர்கள் தேர்வு எழுதவில்லை.

இத்தேர்வு நடைபெறும் 4 மையங்களையும் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை மாண்புமிகு நீதியரசர் திரு.ஏ.எம்.பஷீர் அகமது அவர்கள், சென்னை உயர்நீதிமன்ற கிளை மாண்புமிகு நீதியரசர் திரு.எஸ்.எஸ்.சுந்தர் அவர்கள், சென்னை உயர்நீதிமன்ற மாண்புமிகு நீதிமன்ற பதிவாளர் திரு.வி.தங்கமாரியப்பன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

ஆய்விற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் உரிமையியல் நீதிபதி (Civil Judge) போட்டித் தேர்வினை கண்காணிக்க வட்டாட்சியர் நிலையில் 1 சுற்றுக்குழு அலுவலர் நியமனம் செய்யப்பட்டுள்ளது. தேர்வு மையங்களில் தேர்வினை CCTV மற்றும் வீடியோ கேமரா மூலம் பதிவு செய்யப்படுகிறது. தேர்வு நாளன்று தடைபடாத மின்சாரம் வழங்கவும், தேர்வு மையங்களுக்கு வந்து செல்ல தேவையான பேருந்து வசதி ஏற்பாடு செய்திடவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. தேர்வு நடைபெறும் கல்வி நிலையங்களுக்கு காவல் துறை மூலம் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேர்வர்கள் தேர்வு எழுத அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட முதன்மை நீதிபதி திரு.கே.ராஜசேகர், கூடுதல் மாவட்ட நீதிபதிகள் திரு.எஸ்.அருள்முருகன், திரு.பி.ஜெயராஜ், சமரச தீர்வு மைய தலைவர்/மாவட்ட நீதிபதி திரு.டி.ராஜசேகர், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மைதிலி மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.